IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO. 111/2014**

Deposition P.W.1 witness for Plaintiffs/Defendant/Respondent

Solemnly affirmed and swornby Thiru.S.Chandru Grade III Bench Clerk on 21.08.2023 accordance with the provisions with the Act of 1873.

Name : திரு.ராமச்சந்திரன் Father's Name : திரு.குல்லப்பா

Village : Taluk :

Caste : Calling :

Religion: Age :69

வா.சா. 1

**1**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:**

**1)** வா.சா.ஆ.2 -உயில் ஆவணம் எழுதிய சமயத்தில் ஒசூரில் உள்ள வீடானது எனது பெயரில்தான் இருந்தது என்றால் சரியல்ல. ஆகவே முன்னர் என்னுடைய குறுக்குவிசாரணையின் போது ஒசூரில் 1978ம் ஆண்டு கிரையம் பெற்று பின்பு 1980ம் ஆண்டு மேற்படி நிலத்தில் வீடு கட்டினேன் என்று விவரம் குறிப்பிட்டிருந்தால் அது உண்மைக்கு புறம்பாக தவறாக குறிப்பிட்ட விவரமாகும். 1978ம் ஆண்டு ஒசூரில் உள்ள காலி இடமானது என்னுடைய தந்தை திரு.குல்லப்பா பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று காண்பிப்பதற்குரிய ஆவணங்கள் என்னுடைய கைவசத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டு கட்டிடம் கட்டுவதற்கு கடன் பெற்று கட்டினேன். மேற்படி கடன் தொகையினை எனது பெயரில் பெற்றேன்.

2) நான் குறிப்பிடுவதுபோல் என்னுடைய தந்தை பெயரில் சொத்தினை கிரையம் பெற்றிருந்தால் எனக்கு கட்டிடம் கட்டுவதற்கு கடன் தொகை வழங்கப்பட்டிருக்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 -உயில் ஆவணத்தினை 1991ம் ஆண்டு எழுதிய சமயத்தில் எனது பெயரில் சொத்து ஏதும் இல்லை. வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகள் எஸ்.முதுகானபள்ளி மற்றும் கோபனபள்ளி கிராமத்தில் உள்ளது. ஆகவே மதகொண்டபள்ளி கிராமத்தில் உள்ள சொத்து குறித்து வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறான விவரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தினை என்னுடைய தந்தை உயிருடன் இருந்த சமயத்தில் படித்துப்பார்த்துள்ளேன். என்னுடைய தந்தை 1991ம் ஆண்டு காலம் சென்றார்.

3) வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதி 6 வருடங்கள் கழித்து என்னுடைய தந்தை காலம் சென்றார். 1991ம் ஆண்டு என்னுடைய தந்தை காலம் சென்றார் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அக்டோபர் மாதம் 1997ம் ஆண்டு என்னுடைய தந்தை காலம் சென்றார், தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதிய சமயத்தில் என்னுடைய தந்தைக்கு 70 வயது நிறைவடைந்திருந்தது. என்னுடைய தந்தை காலம் சென்றபோது அவருக்கு வயது 76 வயது நிறைவடைந்திருந்தது. வா.சா.ஆ. 2 உயில் ஆவணத்தில் என்னுடைய தந்தையின் வயது தட்டச்சு செய்யப்படாமல் கையால் எழுதி சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) என்னுடைய தந்தைக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியாது என்றால் சரிதான். எனக்கு தமிழ் மொழியில் படிக்கத்தெரியும் எழுதத் தெரியாது. ஒசூரில் உள்ள வீட்டினைத் தவிர இதர அனைத்து சொத்துகளும் என்னுடைய தந்தைக்கு பித்ராஜ்ஜியமாய் பாத்தியப்பட்ட சொத்துகளாகும். வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதிய சமயத்தில் 1991ம் ஆண்டு வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய பட்டாவாணது என்னுடைய தந்தை பெயரில் இருந்தது. அதனைக் காண்பிப்பதற்குரிய பட்டாவின் நகல் என்னுடைய கைவசத்தில் உள்ளது. வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய பட்டாவானது என்னுடைய தந்தையின் காலம் வரை அவரது பெயரில் இருந்தது, அவர் இறப்பிற்கு பிறகு என்னுடைய பெயருக்கு பெயர் மாற்றம் செய்துகொண்டேன். வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய பட்டாவாணது தற்போது என்னுடைய பெயரில்தான் உள்ளது. வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய பட்டாவாணது எனது தந்தை பெயரிலும் அவர் இறப்பிற்கு பிறகு என்னுடைய பெயரிலும் பெயர்மாற்றம் செய்யப்பட்டதை காண்பிப்பதற்குரிய பட்டாக்களின் நகல்கள் என்னுடைய கைவசத்தில் உள்ளது.

5) வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய வரியினை என்னுடைய தந்தையும் நானும் செலுத்தியுள்ளோம். வீட்டுவரி ரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். சொத்து வரி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய பட்டா மற்றும் இதர வருவாய் ஆவணங்கள் எந்த காலத்திலும் எனது தந்தை பெயரிலும் எனது பெயரிலும் இருந்தது கிடையாது என்றாலும், நாங்கள் எப்போதும் வழக்குப்பட்டிகை சொத்திற்குரிய வரி செலுத்தியது கிடையாது என்றாலும் சரியல்ல.

6) நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் அனைத்தும் தமிழக அரசு எனக்கு இலவசமாக கொடுத்த சொத்திற்குரியது என்றாலும் வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துகளுக்குரிய வரி ரசீதுகளை நான் தாக்கல்வில்லையென்றாலும் சரியல்ல, அரசு எனக்கு வழங்கிய வீட்டிற்கு உரிய கதவு எண்

வேறு ஆகும், அதைக் காண்பிப்பதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராகஉள்ளேன். வழக்குப்பட்டிகை சொத்தில் உள்ள வீட்டிற்கு உரிய கதவு எண்.112 ஆகும் அரசு வழங்கிய வீட்டிற்குரிய கதவு எண்.135 ஆகும். நான் பொய்யாக மேற்படி விவரத்தினை தெரிவித்துள்ளேன் என்றாலும் அரசு எனக்கு வழங்கிய வீட்டிற்குரிய கதவு எண்தான் 112 என்றாலும் சரியல்ல. நான் முன்பு என்னுடைய குறுக்கு விசாரணையில் வழக்குப்பட்டிகை சொத்தில் உள்ள வீட்டிற்குரிய கதவு எண் தெரியாது என்று சாட்சியமளித்துவிட்டு தற்போது என்னிடம் காட்டப்பட்ட ரசீதுகளை பார்வையிட்டு கதவு எண் குறித்து மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) என்னுடைய தந்தைக்கு உரிமைப்பட்ட பித்ராஜ்ஜிய சொத்துகளில் எனக்கு 1/2 உரிமை உள்ளது என்றால் பித்ராஜ்ஜியத்தின் அடிப்படையில் சரிதான், ஆனால் வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின் அடிப்படையில் முழு உரிமை உள்ளது. வா.சா.ஆ.2 ல் எனக்கு எனது பெயரில் வேறு சொத்துகள் ஏதும் இல்லாத காரணத்தினால் மேற்படி உயில் ஆவணத்தை எழுதிவைப்பதற்காக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதிய சமயத்தில் இதர சொத்துகள் உரிமைப்பட்டிருந்தது என்றாலும் ஆகவே மேற்படி சங்கதிகள் பொய்யாக மேற்படி ஆவணத்தில் எழுதப்பட்டிருந்தது என்றாலும் சரியல்ல. என்னுடைய தந்தை இறப்பிற்கு பிறகு வழக்குப்பட்டிகை சொத்தில் எனக்கு பாக உரிமை வழங்கக் கோரி 1ம் பிரதிவாதியிடம் நான் கோரவில்லை, சொத்து எனது பெயரிலும் எனது மனைவியின் பெயரிலும் உள்ளது. வழக்குப்பட்டிகை சொத்துகளில் எனக்கு உரிமை இருந்திருந்தால் என்னுடைய தந்தை உயிருடன் இருந்தபோதும் அவருடைய இறப்பிற்கு பிறகும் 1ம் பிரதிவாதியிடம் பாகம் கூறியிருப்பேன் என்றாலும், அவ்வாறு கோராத காரணத்தினால் எனக்கு சொத்துகளில் உரிமை இல்லையென்றாலும் சரியல்ல.

8) வழக்குப்பட்டிகை சொத்துகளில் எனக்கும் எனது தகப்பனாருக்கும் உரிமையில்லையென்றாலும், ஆகவே போலியாக எனது தந்தை என் பெயரில் எழுதிவைத்ததுபோல் போலியாக வா.சா.ஆ.2 உயில் ஆவணம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் அதனடிப்படையில் எனக்கு வழக்குப்பட்டிகை சொத்துகளில் எவ்வித உரிமையும் கிடைக்கபெறாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின் அடிப்படையில் 2014ம் ஆண்டு வேறு நபர் பெயரில் கிரைய ஆவணம் ஒன்று ஏற்படுத்தியுள்ளேன், அவருடைய பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

9) வழக்குப்பட்டிகை சொத்துகளில் என்னுடைய தந்தைக்கு எவ்வித உரிமையும் இல்லையென்றாலும், எனது பெயரில் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.2 - உயில் ஆவணத்தில் என்னுடைய தந்தையின் வயது மற்றும் சொத்தின் புல எண் குறித்த விவரங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அவ்வாறு செய்யப்பட்ட திருத்தங்களுக்கு உரிய முறையில் கையெழுத்திடவில்லையென்றாலும், வழக்குப்பட்டிகை சொத்துகளில் நானோ என்னுடைய தந்தையோ எந்த காலத்திலும் சுவாதீன அனபவத்தில் இருந்தது கிடையாது என்றாலும் சரியல்ல.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாணை முடிக்கப்படுகிறது.**

**2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் வராத்தரப்பினர் ஆக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1
Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR